DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 127/23

List of Witness : Lw2

Prosecution Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மூர்த்தி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | குப்பணகவுண்டர் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 04/03/2024

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.)

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் மூலச்சத்திரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன். 2018ம் வருடம் சந்தானபாரதிக்கும் எனது மகள் நந்தினிக்கும் திருமணம் நடைபெற்றது. எனது மருமகன் சந்தானபாரதி வெளி நாட்டில் வேலை செய்து கொண்டிருந்தார். திருமணம் முடிந்து அவர் வெளிநாடு சென்றுவிட்டார். சிறிது நாட்களில் வெளி நாட்டில் ஒப்பந்தம் முடிவு பெற்றது என்றும், ஊருக்கு திரும்பி வருவதாகவும் கூறினார். இரண்டு மாதங்கள் கழித்து திரும்பி வந்துவிட்டார். அவர் வெளிநாட்டில் இருந்த போது எனதுமகள் நந்தினி அவரது வீட்டில் தான் இருந்தார். அவர் வெளிநாட்டில் இருந்து வந்த பின்பு அவரது வீட்டில் எனது மகளும், மருமகனும் அவர்களது வீட்டிலேயே குடும்பத்துடன் வசித்து வந்தார்கள். எனது மருமகன் வேலை எதுவும் இல்லாமல் இருந்தார். சிறிது நாட்களில் எனது மகள் கர்ப்பம் ஆனாள். நான்காவது மாதம் முடிந்த பின்பு சென்னையில் அதே கம்பெனியில் வேலை வாங்க போவதாக எனது மருமகன் சொன்னார். எனது மருமகனின் அத்தையான அமுதவள்ளி எங்களிடம் வந்து வேலை வாங்குவதற்காக இருபத்தி ஐந்து லட்சம் கொடுக்கும் படி கேட்டார். நான் திருமணத்தின் போது 47 பவுன் தங்க நகைகளும் இரண்டு லட்சம் மதிப்புள்ள சீர்வரிசைகளும் கொடுத்து இருந்தேன். எனதுமருமகன் சந்தானபாரதி அவரது வீட்டில் இருந்த நபர்களான இந்திராணி, அமுதவள்ளி அனைவரும் சேர்ந்து எனது மகளிடம் பணம் கேட்டு தொந்தரவு செய்வதாக எனது மகள் என்னிடம் கூறினாள். எனது மகளுக்கு ஐந்தாவது மாதம் என்பதால் வளைகாப்பு செய்வதற்காக அவர்களிடம் கேட்பதற்கு எனதுமனைவி சரஸ்வதியும், பாலசுப்பிரமணியும் எனது மருமகனின் வீட்டிற்கு சென்று இருந்தார்கள்.அப்போது மருமகன் வீட்டில் மருமகனும்

அவர்கள் வீட்டில் இருந்தவர்களும் சரஸ்வதியிடமும், பாலசுப்பிரமணியிடமும் பேசமால் இருந்ததால் திரும்பி வந்துவிட்டார்கள். அன்று எனக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தது. அன்று மாலை எனது மகள் எனக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனக்கு ரொம்ப கஷ்மாக இருக்கிறது. இங்கு இருப்பவர்கள் எல்லாம் என்னை பேசுகிறார்கள். பணம் கேட்கிறார்கள் என்று என் மகள் அழுதார். எனக்கு உடல்நிலை சரியில்லாததால் நான் போகமுடியவில்லை. எனது சித்தப்பாவான பிச்சை என்பவரையும் அவரது மகனான செல்வக்குமாரையும் நந்தினியின் தாய்மாமன்களான பாலசுப்பிரமணியன், முருகேசன் ஆகியோர்களும் அங்கு சென்று என்ன என்று கேட்டதற்கு எனது மருமகன் சந்தானபாரதி , இந்திராணி , அமுதவள்ளி அனைவரும் தகாத வார்த்தைகளால் பேசி பாலசுப்பிரமணியை சந்தானபாரதி கையால் அடித்துவிட்டார். அமுதவள்ளி நான் வாழ சொன்னதால்தான் சந்தானபாரதி வாழ்வான் என்றும் 25 லட்சம் கொடுத்ததால்தான் சேர்ந்து வாழ முடியும் என்றும் எனது மகள் நந்தினியை கர்ப்பவதி என்று கூட பார்க்காமல் கீழே தள்ளிவிட்டார். எனது மகள் நந்தினியை வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டார்கள்.சிறிது காலத்தில் எனதுமகள் நந்தினிக்கு குழந்தை பிறந்தது. குழந்தையை பார்க்கவும் யாரும் வரவில்லை. பின்பு சிறிது காலத்தில் எனது மருமகன் விவாகரத்து நோட்டீஸ் அனுப்பினார். நான் பொது மனிதர்களை வைத்து பேசி பார்த்தேன். அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. வேறு வழியின்றி எனது மகள் நந்தினி சம்பவம் தொடர்பாக காவல்நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். ஆஜர் எதிரிகள் செல்வராஜ், இந்திராணி, அமுதவள்ளி, சந்தானபாரதி ஆவார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

25 லட்சம் கேட்டதாக அடித்தாக நான் முதல்விசாணையில் கூறியுள்ள சங்கதிகள் எனது மகள் நந்தினி சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 1ம் எதிரி வெளிநாட்டில் வேலை செய்தாரா என்றால் செய்தார். பணிக்காலம் ஒப்பந்தம் முடிந்து 1ம் எதிரி ஒப்பந்தம் முடிந்ததை என்னிடம் தெரிவித்துவிட்டுதான் இங்கு வந்தார் என்றால் சரிதான். திருமணத்தின் போது நான் போட்ட 47 பவுன் நகை மற்றும்2 லட்சம் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்களை நாங்கள் பெற்றுக்கொண்டோம் என்றால் ஆமாம். 1ம் எதிரி எப்போது வெளிநாட்டில் இருந்து எப்போது வந்தார் என்றால் திருமணம் முடிந்து 2 வாரத்தில் போனார் 2 மாதம் கழித்து வந்தார். ஊருக்கு திரும்பியவுடன் சென்னையில் அதே கம்பெனியில் வேலை பார்ப்பதாகத்தான் 1ம் எதிரி எங்களிடம் சொன்னார் என்றால் ஆமாம். வெளிநாட்டில் இருந்து அதே கம்பெனியில் சென்னையில் வேலை பார்ப்பதற்கு 25 லட்சம் என்னிடம் பணம் கேட்கவேண்டிய அவசியம் இல்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அது உண்மை தான். என் மகளிடம் பணம் கேட்டு தினமும் தொந்தரவு செய்வதாக கூறியுள்ளேன் எப்போது பணம் கேட்டார் அதை பொறுத்து எப்போது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் அப்போது புகார் கொடுக்கவில்லை. நான் சொல்வதுபோல் எந்தவொரு சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் எனது மகளும் 1ம் எதிரியும் சந்தோசமாக வாழ்ந்தார்கள் என்றாலும் அவர்களுக்கு இடையில்

பண பிரச்சனையும் குடும்ப பிரச்சனையோ இல்லைஎன்றால் சரியல்ல. நான் சொல்வது போல் இருந்து இருந்தால் அப்போதே புகார் கொடுத்து இருப்பேன் என்றால் சரியல்ல. வளைகாப்பு செய்வதற்கு நான் போனதாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். என் மகள் இவ்வளவு பணம் கேட்டு தொந்தரவு செய்தார்கள் என்று போன் செய்து அழுதார் என்று போலீசார் விசாரணையில்கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். மைத்துனர் பாலசுப்பிரமணியத்தை அடித்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி சங்கதிகளை போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரி அளித்த சட்ட அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. அது சம்பந்தமாக வேறு எங்கும் வழக்கு நடந்ததா என்றால் வழக்கு நடந்தது நான் எனது மகளுடன் சென்று இருக்கிறேன். எனது மகள் மருமகன் மீது எந்த எந்த நீதிமன்றங்களில் வழக்கு தொடர்ந்து உள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் ஒட்டன்சத்திரம், திண்டுக்கல், மைசூர் மற்றும் மதுரையில் வழக்கு நிலுவையில் உள்ளது. சொத்து கேட்டு தாக்கல் செய்த வழக்கு எந்த நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் தெரியாது.எனது மகள் கொடுத்த பதில் அறிவிப்பில் குழந்தை பிறந்த பின்னிட்டு நடந்த பைசலில் 25 லட்சம் பணம் கொடுத்தால் தான் சேர்ந்து வாழ்வேன் என்று 1ம் எதிரி கூறியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எனது மகள் 25.03.2022ம் தேதி ஒரு புகார் கொடுத்துள்ளார் அன்றோ அதற்கு முன்னரோ வழக்கு சம்பவம் எப்போது நடந்தது என்றால் ஞாபகம் இல்லை. எனது மகளும் , மருமகனும் சேர்ந்து கையாளும் வகையில் நகையை வங்கி கணக்கில் வைக்கப்பட்டு இருந்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். லாக்கர் சாவி மருமகனிடம் தான் இருந்தது. திண்டுக்கல் மாவட்ட் கண்காணிப்பாளரிடம் இரண்டு முறை புகார் கொடுத்த விசயம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. திண்டுக்கல் சமூக நல அலுவலரிடம் புகார் கொடுத்த விசயம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது மகள் மைசூர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான் அங்கு பைனான்ஸ் தொழில் செய்வதால் அங்கு இருக்கிறேன். அதனால் அங்கு வழக்கு போட்டோம். எனக்கு நிரந்தர முகவரி ஒட்டன்சத்திரம் என்றாலும் தொழிலுக்காக மைசூருக்கு போவேன் என்றால் சரிதான். நான் சொல்வது பொய் என்றாலும் மைசூர் முகவரிக்கு வாக்காளர் அடையாள அட்டை மற்றும் ஆதார் அட்டைகளை பெற்றுள்ளதன் அடிப்படையில் அங்கு வழக்கு தொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. என்னுடைய தூண்டுதலாலும் எனது மனைவியின் தூண்டுதலாலும் எனது மகள் நந்தினி 1ம் எதிரி மீது அடுத்த அடுத்த வழக்குகள் தொடுக்கிறார் என்றால் சரியல்ல. இந்த திருமணத்தை முன்நின்று நடத்தியது 4ம் எதிரி அமுதவள்ளி என்றால் சரிதான். அமுதவள்ளிக்கு இரண்டு மகள்கள் இருக்கிறார்கள் என்பதும் என் மகளின் திருமணத்திற்கு முன்பு அவர்களது மகளுக்கு திருமணமாகவில்லை என்ற விவரமும் நன்றாக தெரியும் என்றால் சரிதான். அமுதவள்ளி அவர்களது மகள்களை திருமணம் செய்து கொடுக்க ஆசைப்பட்டு இருந்தால் எனது மகளை முன்நின்று 1ம் எதிரிக்கு திருமணம் செய்து வைத்து இருக்க மாட்டார்கள் என்றாலும் எனது மகளை கொடுமைப்படுத்தியதால் அவ்வாறு நினைக்க

தோன்றுகிறது. எனது மகள் புகாரில் சொன்னதுபோலும் நான் முதல்விசாரணையில் கூறியுள்ளதுபோலும் எந்தவித வழக்கு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் எந்தவகையில் பணமோ நகையோ பொருளோ கேட்டு எனதுமகளை அடிக்கவோ, தொந்தரவு செய்யவோ இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

P SRIDEVI
Digitally signed by P SRIDEVI
Date: 2024.03.04 17:12:02 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 04/03/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 127/23

List of Witness : Lw3

Prosecution Witness : PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சரஸ்வதி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | மூர்த்தி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 04/03/2024

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.)

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் மூலச்சத்திரத்தில் குடியிருந்து வருகிறேன். 2018ம் வருடம் எனது மகள் நந்தினியை ஆஜர் எதிரி சந்தானபாரதிக்கு திருமணம் செய்து கொடுத்தோம். அவர் திருமணம் முடித்து ஒன்னரை மாதமோ இரண்டு மாதமோ வெளி நாடு சென்றிருந்தார். பின்பு வெளிநாட்டில்இருந்து வந்தபின்பு கணவன் மனைவி இருவரும் சந்தோசமாக வாழ்ந்து வந்தார்கள். பிறகு எனது மகள் கர்ப்பமானாள். அவர் சென்னையில் வேலைக்கு செல்ல இருப்பதாலும் எனது மகளுக்கு 5வது மாதம் என்பதாலும் வளைகாப்பு போடுவதற்காக அவர்களது வீட்டில் பேசுவதற்காக நானும் எனது தம்பி பாலசுப்பிரமணியும் சென்றிருந்தோம் . அங்கு யாரும் எங்களிடம் முகம் கொடுத்து கூட பேசவில்லை. நானும் எனது தம்பியும்வீட்டிற்கு திரும்பி வந்துவிட்டோம். அன்று இரவு எனது மகள் நந்தினி எனது கணவருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு அழுதார். வளைகாப்பு போட்டால் நீ அங்கேயே இருக்கவேண்டியதான் என்றும், நான் இங்கேயே இருப்பேன் என்றும் சந்தானபாரதி மிரட்டுவதாக அழுதார். பிறகு எனதுமாமனார் பிச்சை , தம்பி பாலசுப்பிரமணி, கொளுந்தனர் செல்வக்குமார் அனைவரும் சென்று பேசி பார்த்தார்கள். அவர்கள் பேச சென்றபோது சந்தானபாரதியின் அத்தை ஆஜர் எதிரி அமுதவள்ளி எனது மகள் நந்தினியை பிடிதது கீழே தள்ளிவிட்டார். நான் பார்த்துவாழ சொன்னால்தான் சந்தான பாரதி உன்னுடன் வாழ்வான் என்றும் இல்லையென்றால் வாழ மாட்டான் என்று சொல்லி பிரச்சனை செய்தார். நாங்கள் எனது மகள் நந்தினியை எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டோம். எனது மகளுக்கு குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்து ஒருமாதம் கழித்து அவரது அத்தை அமுதவள்ளியின் கணவரும் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள்.

குழந்தையை பார்த்துவிட்டு புகைப்படம் எல்லாம் எடுத்துச்சென்றார்கள். பிறகு நாங்களும் பல நபர்களை வைத்து பலவிதமாக பேசி பார்த்தோம். அவர்கள் ஒத்து வரவில்லை. வரதட்சனையாக 25 லட்சம் பணம் கொடுத்தால்தான் வாழ விடுவோம் என்று ஆஜர் எதிரிகள் அனைவரும் சொன்னார்கள். பிறகு விவாகரத்து நோட்டீஸ் அனுப்பினார்கள். நாங்கள் அவர்கள் இருவரும் சேர்ந்து வாழ வேண்டும் என்பதற்காக தான் இன்று வரை போராடிக்கொண்டு இருக்கிறோம். போலீசார் என்னைவிசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–

எனது மகள் எதிரிகள் மீது கொடுத்த புகார் விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு புகார் எந்த தேதியில் கொடுத்தார் அதில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்ற விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் எனது மகள் ஒரு புகார் கொடுத்துள்ளார் அதற்கு சாட்சி சொல்ல வருமாறு என்னை அழைத்ததால் நான் வந்தேனா என்றால் ஆமாம்.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

P SRIDEVI
Digitally signed by P SRIDEVI
Date: 2024.03.04 17:12:11 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 04/03/2024